நவீனத் தமிழாய்வு
(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

Journal of
**Modern Thamizh Research**
(A Quarterly International Multilateral Thamizh Journal)

Vol. 8 No. 4
புரட்டாசி- மார்கழி 2051
October - December 2020
ISSN : 2321 - 984X

*Chief Editor*
Dr. M. Sadik Batcha
*Advisory Editor*
Dr. N. Chandra Segaran
Editorial Board
Dr. MAM. Rameez
Dr. Jeyaraman
Dr.A. Ekambaram
Dr. G. Stephen
Dr. S. Chitra
Dr. S.Senthamizh Pavai
Dr. A. Shunmughom Pillai
Dr. P. Jeyakrishnan
Dr. Seetha Lakshmi
Dr. S. Easwaran
Dr. Kumara Selva
Dr. Ganesan Ambedkar
Dr. Krishanan
Dr. Kumar
Dr. S. Kalpana
Dr. T. Vishnukumaran
Dr. M. N. Rajesh
Dr. Govindaraj
Dr. Uma Devi
Dr. Senthil Prakash
Dr. Pon. Kathiresan
Dr. S. Vignesh Ananth
Dr.M. Arunachalam
Dr. S. Bharathi Prakash

26 பகுதி-7 Part -7

# சான்றிதழ்

# Certificate

*This is to certify that Dr. / Mr. / Ms.*

த. இந்திரா பிரியதர்ஷினி
ஆய்வாளர், முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ச. சுமதி
நெறியாளர் & துறைத் தலைவர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

*has Published a paper titled*

சாகித்ய அகாதமி விருது பெற்ற சூடிய பூ சூடற்க என்னும்
சிறுகதையில் காணலாகும் சமூக சிந்தனைகள்

Sl.No. 317 361
Pages : 1966-1970

Published by
RAJA PUBLICATIONS
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

*Chief Editor*
Dr. M. Sadik Batcha
Associate Professor
PG and Research Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India
Mobile : 94434 17242, Email : ms_batcha@yahoo.co.in

# சாகித்ய அகாதமி விருது பெற்ற சூடிய பூ சூடற்க என்னும் சிறுகதையில் காணலாகும் சமூக சிந்தனைகள்

த. இந்திரா பிரியதர்ஷினி
ஆய்வாளர், முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் ச. சுமதி
நெறியாளர் & துறைத் தலைவர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி (த), வேலூர் - 632002, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

அரசு அலுவலகம் ஒன்றில் கடைநிலை ஊழியனாக பணிபுரியும் பூமிநாதன் அலுவலகத்தில் படும் துன்பத்தையும் அவரைப் போன்ற பல கடைநிலை ஊழியர்கள் படும் பாட்டையும், சில அரசு ஊழியர்கள் இலஞ்சம் வாங்கி அதனால் பயனடைவதுப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. சமூகத்தின்மீது அக்கறைக் கொண்டு அரசு மக்களுக்கு சேவை செய்ய, அரசு அலுவலர்களை நியமிக்கின்றது. அதை அறவே மறந்த சில அரசு ஊழியர்கள் அரசு அலுவலகத்திற்கு வந்துவிட்டு தனது சொந்த அலுவல்களைக் கவனிப்பதும், அரசு கட்டடங்கள் தரம் இல்லாமல் இருப்பதற்கு அரசு ஊழியர்களே காரணமாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் இலஞ்சம் வாங்குவது சாதாரண ஒன்றாகிவிட்ட நிலைமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பெரிய பெரிய பொறுப்பில் உள்ள அரசு அதிகாரிகளே இலஞ்சம் வாங்கினால் யார்தான் இதைத் தட்டிக் கேட்பது என்றக் கேள்வியை ஆசிரியர் முன்வைத்துள்ளதை பின்வரும் கட்டுரை மூலம் காணலாம்.

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"

பொருள்கள் வரும் வழி உண்டாக்குதலும், வந்தப் பொருளை ஒரு வழியாகத் தொகுத்தலும், தொகுத்தப் பொருளைப் பிறர் கொள்ளாமல் காத்தலும், காத்தவற்றை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு விடுத்தலும் வல்லவனே அரசன் என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப அரசு என்பது ஒவ்வொரு துறையிலும் ஆட்களை நியமித்தால் மட்டும் போதாது. அவர்கள் சரியாக அவர்களின் பணியைச் செய்கிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும். பணியைச் செய்யாத ஊழியர்களை வேலையில் இருந்து நீக்கவும் செய்ய வேண்டும் என்பதே இக்கதையின் ஆசிரியர் கூறவரும் கருத்தாகும் என்பதைப் பின்வரும் கட்டுரை வழியாக அறியலாம்.

## பூமிநாதன் அலுவகப் போராட்டம்

அரசு அலுவலகம் ஒன்றில் கடைநிலை ஊழியராக பணியாற்றுபவர் பூமிநாதன். குடியரசு தின நாள் அலுவலகங்களின் பண்டிகை என்பதால் விடுமுறை நாட்களில் பூமிநாதனுக்கு வேலையும் உண்டு, வருமானமும் உண்டு. அட்டைப் பெட்டிக்குள் இருக்கும் காந்தி படத்தை வெளியே எடுத்து துடைத்து வைத்தல், தேசியக் கொடியை உதறி சுத்தப்படுத்தி வைத்தல், கொடி கட்டும் வெள்ளைக் கயிறு, மலர்கள் வைக்கும் தட்டம், மிட்டாய் வைக்கும் தட்டம் போன்றவற்றை சுத்தப்படுத்தி வைத்தல், இவையெல்லாம் முந்தைய நாள் வேலை பூமிநாதனுக்கு.

பூமிநாதனுக்கு அடுத்த நாள் தான் குடியரசு தினம் என்றாலும், முந்நாளே விருந்தினர்க்கு வாங்க வேண்டிய இனிப்பு வகைகள், குழந்தைகளே இல்லாவிட்டாலும் அவர்களுக்கு ஆரஞ்சு மிட்டாய்

போன்ற அனைத்து ஏற்பாட்டையும் செய்ய வழக்கம் போல முன்பணம் வாங்கிக் கொள்ளச் சொன்னார் அதிகாரி. கொண்டாட்டத் தினத்தன்று வெள்ளைநிற உடையில் தான் இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் உத்தரவு. உத்தேசமாக அனைத்து செலவுக்கும் 1,500 ரூபாய் ஆகும். அதில் இருநூறு ரூபாய் தனக்கென்று ஒதுக்கிக் கொள்வார் பூமிநாதன். முன்பிருந்த அதிகாரி மிச்சமீதியை பூமிநாதனை கொண்டுப் போகச் சொல்வார். இப்போதிருக்கும் அதிகாரி தன் வீட்டில் கொடுக்கச் சொல்கிறார். இப்போதைய அதிகாரி வாங்கப்படாத ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை போன்றவை வாங்கியதாக பொய்க்கணக்கு வேறு எழுதச் சொல்கிறார்.

எவ்வளவு தான் உயர் பதவியில் இருந்தாலும் இதுபோன்ற ஒருசில உயர் அதிகாரிகளால் தான் அனைத்து அரசு அலுவலர்களையும் மக்கள் பணத்தாசை பிடித்தவர் என்று நினைக்கிறார்கள். உயர் அதிகாரிகளின் மனநிலையையும், கடைநிலை ஊழியனின் மனநிலையையும் அழகாக காட்டியுள்ளார் ஆசிரியர்.

இலஞ்சம் வாங்குதல்

> அலுவலகத்தில் யாவர்க்கும் தெரியுத்தான். என்றாலும், ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பதில்லை என்ற இரகசியக் காப்பு வாக்கறுதி கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்கள் இரகசியக் காப்பு வாக்குறுதி எடுப்பதின் அர்த்தம் இதுதானோ என்னவோ! எல்லோரும் உபதொழிலாக மீன் பிடித்தார்கள். எனவே தூண்டிலும் கையுமாக அலைய வேண்டி இருந்தது. அவரவர் தூண்டிலில் சிக்கும் மீன் அவரவர்க்கு. பெரிய மீன்கள் சிக்கும்போது பெரிய கண்டம் அதிகாரிக்கும் சின்னக் கண்டம் பிடித்தவருக்கும் என்பதோர் உடன்பாடு. நடுமுள் தலை எனக் கிடைக்கும் பூமிநாதனுக்கு. பெருந்துண்டு முள் நீக்கி டப்பாக்களில் அடைக்கப்பட்டு மேலேறிச் செல்லும் என்றார்கள். அதிகாரி, மேலதிகாரி, உயரதிகாரி, மேலுயர் அதிகாரி, அமைச்சர், உயரமைச்சர் எல்லோரும் மீன் தின்னும் சாகபட்சிணிகள்தான் என்றார்கள்.[2]

இதன்வழி மீன் பிடித்தல் என்னும் மறைமுக வார்த்தையின் மூலம் இலஞ்சம் வாங்குதலை சாடியுள்ளார் ஆசிரியர். இலஞ்சம் என்ற வார்த்தையை வெளிப்படையாகக் கூறாமல் இலைமறை காய் போல் கூறிய விதம் போற்றுதற்குரியது. அதிலும் உயர் பதவியில் உள்ள அதிகாரிகளுக்குப் போக மீதமுள்ள சொற்பத் தொகையே பூமிநாதன் போன்ற கடைநிலை ஊழியருக்கு கிடைக்கும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ள விதம் மிகவும் அருமை. இன்றைய காலக்கட்டத்தில் இலஞ்சம் வாங்குதல் என்பது சர்வசாதாரணமான ஒன்றாக மேலதிகாரி முதல் கடைநிலை ஊழியர் வரை இழையோடிவிட்டது தெரிய வருகிறது. இந்த நிலைமை நீடித்தால் இலஞ்சம் வாங்குதல் என்பது நாகரிகப் பட்டியலில் சேர்ந்து விடுமோ என்று அஞ்சத் தோன்றுகிறது.

சிறப்பு விருந்தினர் வருகை

> பத்து மணிக்கு தனது வெளிநாட்டுக் காரில் தாமதிக்காமல் சிறப்பு விருந்தினர், ஆட்சிமன்ற உறுப்பினர் வருவார். அதைக் கார் என்பதா, வேன் என்பதா? குளிர் பாய்ச்சும் வசதி, சின்னதாய் டி.வி., தொலைப்பேசி, சொகுசு இருக்கைகளின் மீது போர்த்தப்பட்ட புல் அழுக்குப்படாத வெள்ளை நிற பிச்சி பூப்போன்ற உறைகள்... எல்லோருக்கும் எல்லாம் வாய்த்து விடுகிறதா என்ன?[3]

அரசு கொடுக்கும் சம்பளத்தில் வாழும் அதிகாரிகளுக்கு வெளிநாட்டுக் கார் வாங்கும் அளவு வசதி வாய்ப்புகள் எங்கிருந்து வந்தது என்று யோசிக்கத் தோன்றுகிறது. அவர்களின் பாதுகாப்பாக ஒரு நான்கு பேர் வருவார்கள். சினிமா சண்டைக்காட்சியில் நடிக்கும் நடிகர்களைப் போல உடல்வாகு கொண்டவர்கள். இந்தியர்களுக்கு மட்டும் அவ்வளவு பெரிய தொப்பை எங்கிருந்து வருகிறது என்று ஆசிரியர் கேட்கும் விதம் மிகவும் மறைமுகமாகவும்,

அதேபோல் அவர்கள் சோம்பேறிகள் என்பதை இலைமறை காய்போல் கூறியுள்ள விதம் அருமை.

அரசு அலுவலகக் கட்டடத்தின் நிலைமை

'தொடர்ந்து மேலும் சில கார்கள் வரும். அலுவலகக் கட்டடம் பூரிப்பில் சற்று அளவாகக் குலுங்கிக்கொள்ளும். அதிகமாகக் குலுங்கினால் விரிசல் விட்டு நிற்கும் கட்டடம் விழுந்துவிட நேரும். பத்து ஆண்டுகள் முன்பு ஒரு குடியரசு தினத்தில் தான் பொதுப்பணித்துறை அமைச்சர் திறந்து வைத்தார். அதில் அவர் பல கூடைகள் மீன் பிடித்திருப்பார் போலும். அன்றைய கொண்டாட்டச் செலவில்தான் பூமிநாதன் தனது பங்கில் பழைய சைக்கிளை ஐம்பைத்தைந்து ரூபாய்க்கு விற்றுவிட்டு புது சைக்கிள் வாங்கினார்'[4] என்று ஆசிரியர் கூறியுள்ளது இன்றைய கால வாழ்க்கையின் எதார்த்தத்தை உணர்த்துகிறது.

அரசு அலுவலகக் கட்டடம் பத்து ஆண்டுகள்கூட தாங்காமல் விரிசல் விட்டு நிற்பது தெரியவருகிறது. அரசு கட்டடம் கட்ட ஒதுக்கிய நிதியை முக்கால் பங்கு கொள்ளையடிக்கப்பட்டு கால் பங்குதான் கட்டடத்திற்கு பயன்படுகின்றது. அவ்வாறிருக்க கட்டடம் எப்படி காலங்கடந்து நிமிர்ந்து நிற்க முடியும் என்று சூசகமாக கூறியுள்ள விதம் சமூகத்தினரை மிகவும் சிந்திக்க வைக்கிறது.

அரசு நிதி ஒதுக்குவது மட்டுமின்றி இதுபோன்ற அதிகாரிகளை கண்காணிக்க ஒரு குழு அமைத்தால் இது போன்ற கொள்ளைகள் தடுக்கப்பட வாய்ப்புகள் இருக்கிறது. அரசுக்கு மட்டுமல்ல சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் பொறுப்புகள் உள்ளது என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் பத்து மணிக்கு விழா முடிந்ததும் அனைவரும் சென்றுவிடுவர். அலுவலகத்தை பூட்டிவிட்டு செல்லலாம் என்றாலும் மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு முன் காலையில் ஏற்றிய கொடியை இறக்க வேண்டும்.

கொடி ஏற்றத்துக்குத்தான் விழா. இறக்கத்துக்கு இல்லை. ஆட்சிமன்ற உறுப்பினர் ஏற்றிய கொடியை கடைநிலை ஊழியர் இறக்கலாம். அதில் தவறேதும் இல்லை. குடியரசு தலைவர் ஏற்றி வைத்தக் கொடியை யார் இறக்குவார்கள்?

கொடி ஏற்றத்தை விமரிசையாக கொண்டாடும் அரசு, கொடி இறக்கத்தை ஏன் கொண்டாடுவதில்லை என்ற கருத்தை ஆசிரியர் முன்வைத்துள்ளார். அது மட்டுமல்லாமல் மேலதிகாரி பத்து மணிக்கே சென்றுவிடுவார். ஆனால், கடைநிலை ஊழியர் மாலை வரை இருந்து கொடி இறக்கிவிட்டு அனைத்து கட்டடத்தையும் பூட்டி விட்டுதான் செல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் கடைநிலை ஊழியரின் உழைப்பும், பங்கும் கடைசி வரை வெளிவராமலே மறைந்துவிடுகிறது என்ற ஆசிரியரின் மனக்குமுறல் அவரின் வரிகளில் நன்றாகவே வெளிப்படுகிறது.

அரசு அலுவலகங்களின் இன்றைய நிலைமை

பூமிநாதனுக்கு ஒன்பதரை மணிக்கே அலுவலகம் திறக்க வேண்டும். அதிகாரிகள் புறப்பட்டுச் சென்ற பின்னும் காகிதங்களைப் பொறுக்கிக்கொண்டு இரவு ஏழரை மணி வரை போராடும் ஊழியர்கள் இன்னமும் ஒன்றிரண்டு பேர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களால் மட்டுமே அலுவலகம் இன்னும் இயங்கிக்கொண்டு இருக்கிறது எனலாம்.

அலுவலக நாட்களாக இருந்தால் மற்றவர்கள் பத்து மணி முதல் பதினொன்றே முக்கால் வரை வந்து சேரலாம். மூன்றரை மணிக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் செல்லலாம் என்பது அவர்களின் சொந்த விதி. அலுவலகம் வந்துவிட்டு அவரவர் சொந்த வேலைகளை கவனிக்கச் செல்வார்கள், மருத்துவரைப் பார்ப்பது, சீட்டுப் பணம் கட்ட, சிற்றுண்டி தின்ன... இதுபோன்றப் பல அலுவல்கள் அலுவலக நேரத்தில்தான் நடக்கும் என்று ஆசிரியர்

கூறியுள்ளது மிகவும் உண்மையான ஒன்றுதான் அரசு வேலை என்பதே மக்களுக்கு வேலை செய்யதான் என்பதை மறந்த அலுவலக ஊழியர்களை ஏன் வேலையிலிருந்து தூக்கிவிட்டு வேறு ஊழியர்களை அமர்த்த சட்டம் கொண்டுவரக் கூடாது? என்று கேட்பது போல் உள்ளது.

### தியாகி என்.ஜி. ராமசாமி

கொடியேற்றம் காலை பத்து மணிக்குதான் என்றாலும் சில ஒழுங்கு நடவடிக்கைக்காக காலை ஏழு மணிக்கே புறப்பட்டுவிட்டார் பூமிநாதன். சிங்கநல்லூரில் இருக்கும் பூக்கடையில் பூக்களுக்கும், மாலைகளுக்கும் பூச்செண்டுக்கும் சொல்லியிருந்தார். பூக்களை வாங்க செல்லும்போது தியாகி என்.ஜி. ராமசாமி சிலையருகில் ஒரு முதியவர் நின்றுக் கொண்டிருந்தார். கதர்சட்டை அணிந்து காந்தியவாதி போல் தோற்றமளித்தார். ஏதோ கடையில் வாயிலோன் வேலை செய்பவர் போன்று தெரிந்தது. தியாகி என்.ஜி. இராமசாமி சிலை காமராசர் சாலையும், திருச்சி சாலையும் சந்திக்கும் இடத்தில் காவல் நிலையத்திற்கு எதிரில் இருந்தது.

தொழிற்சங்கம் தொடங்கியதற்காக கொலை செய்யப்பட்டவர் தியாகி என்.ஜி.ஆர். தியாகி என்.ஜி.ஆர் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது குத்தியவர் யார் என்று தெரிந்தும் போலீசார் கேட்டபோது, போலீசுக்குச் சொல்லாத காந்தியவாதி. பூமிநாதன் அப்பா மில் தொழிலாளிதான். என்.ஜி.ஆர் பற்றிய வீரதீரக் கதைகளை பூமிநாதனுக்கு சொல்லியிருக்கிறார். என்.ஜி.ஆர் செல்வாக்கான மில் முதலாளிகள் குலத்தில் பிறந்து தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வைக்கப் போராடியவர்.

**அவருடைய கோஷம் 'தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்' என்பது. இன்று சங்கங்கள் யாவும் தங்கம் செய்துக் கொண்டிருக்கின்றன.'**

சங்கத்தை உடைக்க என்.ஜி.ஆர்-க்கு பணமும், பெண்ணும் தருவதாக முதலாளிகள் கூறியும் ஏற்க மறுத்தார். அதனால் வேறு வழியின்றி என்.ஜி.ஆரை கொலை செய்ய வேண்டியிருந்தது முதலாளிகளுக்கு. என்.ஜி.ஆர் தனது முப்பதாவது வயதில் இறந்தபோது இறுதி ஊர்வலத்தில் கூட்டம் அலைமோதியது. இன்று ஒன்றுமே செய்யாமல் இருப்பவருக்கு ஊரெல்லாம் சிலைகள் வைக்கப்படுகின்றது. என்.ஜி.ஆர் போன்ற ஒரு சில தியாகிகளையும் பணக்கார வர்க்கம் விட்டு வைக்காதது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இரு கைகளையும் யாசிப்பது போலும், யாதோ யோக முத்திரை போலும் கண்களை மூடி காலை வெயில் முகத்தில் பட சிலையின் அடியில் நின்றிருந்த காந்தியவாதி சுருதி பிசகாமல் பாடிக் கொண்டிருந்தார்.

தியாகிக்காக பாடுகின்றாரோ, நாட்டிற்காக பாடுகின்றாரா என்பது தெரியவில்லை. அவர் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்துக் கொண்டிருந்தது. சூரிய வடிவில் கருணை சுரந்து பொழிந்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது அவர் பாடிய பாடல் பூமிநாதனுக்கு.

அங்கிருந்து போக மனமில்லாமல் சைக்கிளை உருட்டிக் கொண்டு பூக்கடைக்கு நடந்தார் பூமிநாதன். ஏற்கனவே அரசு அலுவலுக்காக ஆர்டர் செய்த மாலைகளை வாங்கிக் கொண்டு மற்றொரு மாலை கேட்டார் பூமிநாதன்.

**'இன்னொரு மாலை வேணும்'**

**'ரெண்டு தானுங்க சொன்னீங்க'**

**'ஒண்ணு கூடக் கேட்டா தர மாட்டீரா?'**

**'கோவப்படுறீங்களே! விக்கறதுக்கு தானுங்களே இருக்கோம்?'**

சைக்கிளை பூக்கடை முன்னர் நிறுத்திவிட்டு தியாகி சிலையை நோக்கி நடந்தார் பூமிநாதன். மாலையை தியாகி சிலைக்கு போடுவாரா,

கண்களை மூடிப் பாடிக் கொண்டிருக்கும் பெரியவர் கழுத்தில் அணிவிப்பாரா என்று காலைச்சூரியன் ஆர்வமாக இருந்தான் என்பதைக் கூறி முடிவினை வாசகர்களிடம் விட்டுவிடுகிறார்.

முடிவுரை

இக்கதையின் வாயிலாக ஆசிரியர் இன்றைய நடைமுறை உண்மைகளை எடுத்துக் காட்டுகின்றார். கடைநிலை ஊழியன் என்றுமே கடைநிலை ஊழியனாகவே இருக்கின்றான். அவன் உழைப்பு என்றுமே கொண்டாப்படுவதில்லை. கடைநிலை ஊழியரின் உழைப்பு சுரண்டப்படுவதாகச் சாடுகின்றார் ஆசிரியர். அது மட்டுமல்லாமல் அரசு அலுவலராக இருந்துக் கொண்டு அரசு வேலைகளை கவனிக்காமல் தன் சொந்த வேலைகளைப் பார்க்கும் அரசு அலுவலர்களால்தான் இன்று பல அலுவல்கள் முடிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள் தங்களது கடமையை ஒழுங்காகச் செய்தால் எந்த வேலையும் தேக்கத்தில் நிற்காமல் உடனுக்குடன் முடியும் என்பதை இந்தச் சமூகத்திற்கு எடுத்துக்கூறுகின்றார்.

அரசு அலுவலர்கள் என்பவர்களும் சமூகத்தில் இருந்துதான் செல்கின்றனர். இருப்பினும் தனது கடமையை மறந்து சமூகத்தை மறந்து சுயநல வாழ்வு வாழ்வதில் நாட்டிற்கு இழப்புதானே தவிர எந்த பயனும் இல்லை. நாட்டையும் சமூகத்தையும் பேணிக்காக்கும் பொறுப்பு ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாக கூறியுள்ள விதம் பாராட்டிற்குரியது. இலஞ்சம் வாங்குவதும் தவறு, கொடுப்பதும் தவறு என்பதை மறைமுகமாக மீன் பிடித்தல் என்னும் வார்த்தையை பயன்படுத்தி சமூகத்தை சாடியுள்ளார் ஆசிரியர். என்.ஜி.ஆர் போன்ற தியாகிகள் வாழ்ந்த நம் நாட்டில் இலஞ்சம் வாங்குவதும், அரசு அலுவல்களை சரிவர செய்யாமல் சுயநலமாக வாழும் மனிதர்களும் இருக்கிறார்கள் என்பது வருத்தமளிக்கிறது.

ஒவ்வொரு குடிமகனும் நாட்டிற்கும் தான் வாழும் சமூகத்திற்கும் சுயநலமின்றி பொதுநல நோக்கோடு உழைக்க வேண்டும் என்பதை இக்கதையின் வாயிலாக மிகத் தெளிவாக கூறுகின்றார். குடிமக்களாகிய நாம் நம் கடமையை உணர்ந்து செயல்பட்டால் இலஞ்சம் இல்லா இந்தியாவை உருவாக்கலாம்.

சான்றெண் விளக்கம்

1. திருக்குறள், 385
2. சூடிய பூ சூடற்க - சிறுகதைகள், நாஞ்சில் நாடன், தமிழினி, 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், சென்னை-51, ப.92
3. மேலது, ப.93
4. மேலது, ப.93
5. மேலது, ப.95
6. மேலது, ப.96

ஃ